JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 50/2024 Date:27.04.2026 P.W. 1 / LW-1

| | |
|---|---|
| பெயர் | திருமதி. பாரதி |
| தந்தை பெயர் க/பெ | திரு. சுதீஸ் |
| முகவரி | ஜி 1, வேல்சித்தா அப்பார்ட்மண்ட், சுந்தர் தெரு, அன்னை நகர், கொரட்டுர், சென்னை 26 |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | 30/2026 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 27th day of April 2026.

எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜரில் உள்ளார்கள்.
**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் முதலாம் எதிரி சுதீஸ் எனது கணவர் ஆவார். அவருக்கும் எனக்கும் 21.08.2020 அன்று பாடி சிவன் கோவிலில் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைப்பெற்றது. எனது திருமணத்தின் போது எனக்கு தேவையான அனைத்து வீட்டு உபயோக பொருட்களான பிரிட்ஜ், வாசிங் மிஷின், சமையல் பாத்திரம் மற்றும் வீட்டிற்கு தேவையான அனைத்து பொருட்களும் எனது பெற்றோர்கள் வாங்கி கொடுத்தார்கள். அதன் மதிப்பு சுமார் ரூ.8 லட்சம் ஆகும். திருமணம் முடிந்து எனது வீட்டிற்கு சென்றோம். அதன் பின்பு எனது மாமியார் வீட்டிற்கு சென்றோம். அப்போது 22.08.2020 அன்று அங்கு சென்ற போது எனது மாமியார் என்னிடம் நீ கடனை முழுவதையும் அடைத்துவிட்டு தான் நீங்கள் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று முதலில் கன்டிஷன் போட்டார்கள். அந்த கடன் அவர்கள் வாங்கியது தான். அவர்கள் எங்கள் கல்யாணத்திற்கு முன்பு வாங்கி கடனை தான் அடைக்க வேண்டும் என்று சொன்னார்கள். மேலும், அன்றைய தினமே கல்யாணத்தை இவ்வளவு கேவலமாக பன்னி இருக்காங்களே என்று எனது மாமியார் எனது கணவரிடம் கூறி எங்களால் வெளியே தலை காட்ட முடியவில்லை என்று அசிங்கமாக பேசினார். கல்யாணம் முடிந்த இரண்டு வாரத்திற்குள்ளே நான் அணிந்திருந்த இரண்டு மோதிரங்களை அவர்கள் அடமானம் வைத்துவிட்டார்கள். இதை செய்தது எனது மாமியார் மற்றும் எனது கணவர் ஆவார். மேலும், என் திருமணத்தின் போது எனது கணவருக்கு வேலை இல்லை. நான் தான் அப்போது வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். வீட்டு செலவுகளையும் அவங்களுடைய கடன்களையும் நான்

சம்பாதித்து தான் அடைத்துக்கொண்டிருந்தேன். அதன் பின்பு நான் Ph.D படிப்பதற்காக நான் வேலை பார்த்த கல்லூரியிலிருந்து நான் ராஜனாமா செய்துவிட்டு அதன் பின்பு எஸ்.ஆர்.எம். கல்லூரியில் சேர்ந்தேன். அதன் பின்பு எனது மாமியார் எதற்கு நீ வேலைலையை விட்டாய் உன்னை நம்பி தான் அவ்வளவு கடன் இருக்கிறது. நீ வேலையை விட்டால் எப்படி அடைப்பது என்று உனக்கு அறிவில்லையா, படித்த திமிரா என்று என்னை அசிங்கமாக எனது மாமியார் என்னை திட்டினார். மேலும், 03.01.2021 அன்று எனது அக்கா தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார். எவ்வளவு நாள் தான் இப்படி அதை நினைத்து கொண்டு இருப்பாய் என்று கூறி எனது கணவர் என்னிடம் செக்சியூல் ரிலேஷன் வைத்துக்கொண்டார். என்னை போர்சபலி செக்சியூல் ரிலேஷன் சிப் வைத்துக்கொண்டார். மேலும், எனது கணவர் வீட்டில் எந்த வேலையும் செய்யாமல் என்னை உடலலவிலும், மனதளவிலும் என்னை அடித்து துன்புறுத்துவார். மேலும், 13.02.2021 அன்று அவர்கள் இரவு 11.00 மணியளவில் அவர்கள் வீட்டில் வைத்து எனது தாலி செயினை கழட்டி கொடுக்க வேண்டும், இல்லை என்றால் தான் தூக்கி மாட்டி கொல்வதாக எனது மாமியார் என்னை மிரட்டினார். மேலும், இந்த கொடுமைகளை எனது பெற்றோர்களுக்கு தெரிவிக்க நான் விரும்பினேன். ஆனால் அவர்கள் எனது செல்போனை பிடிங்கி வைத்துக்கொண்டார்கள். மேலும், எனது பெற்றோர்களை ஒரு கல்யாணம் பன்ன வக்கில்ல, டவுரி கொடுப்பதற்கு வக்கில்ல, இதில் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமா என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டினார்கள். மேலும், என்னிடம் இருந்து தாலி செயினை பறித்துக்கொண்டு அவர்கள் என்னை அவர்கள் வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். மேலும், எனது கணவரின் அண்ணன் என் வாழ்க்கையை அப்படி தான் செய்தீர்கள் இப்போது அந்த பெண்ணின் வாழ்க்கையை ஏன் கெடுக்கிறீர்கள் என்று அவர் கேட்டார். அதன் பின்பு 14.02.2021 அன்று நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுப்பதாக இருந்தேன். ஆனால் அவர் அண்ணன் எங்கள் வீட்டில் வந்து பேசி புகார் கொடுக்க வேண்டாம். பேசிக்கொள்ளலாம் என்று தடுத்து விட்டார். எனது மாமியார் டவுரி எதுவும் கொடுக்கவில்லை என்று பேசியதால் எனது பெற்றோர்கள் என் கணவருக்கு என் பெயரில் இருசக்கர வாகனத்தை வாங்கி கொடுத்தார்கள். அதன் பதிவெண். TN 12 V 4284 ஆகும். மேலும், எனது கணவர் அவருக்கு கடன் கொடுப்பதாக கூறி எங்கள் வீட்டில் இருந்து சுமார் 4 சவரன் தங்க நகை (3 ஜோடி கம்மல்) வாங்கி சென்றார்கள். மேலும், மார்ச் மாதம் 2021 வருடம் எனது கணவர் மொத்தம் 7 சவரன் நகைகளை எனது அம்மாவிடம் இருந்து வாங்கி சென்றார்கள். 15 நாட்களில் அவை மீட்டு தருவதாக வாங்கி சென்றார்கள். ஆனால் இது நாள் வரை அந்த நகைகளை மீட்டு தரவில்லை. அதனை அவர்கள் அடகு வைத்து கொண்டார்கள். மேலும், எனது கணவரின் தங்கை சினேகாவிடம் போன் செய்து ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்ட போது அதற்கு அவர்கள் நாங்கள் இப்படி தான் நகை பணம் கேட்போம். எங்களது தேவைக்கேற்ப உங்களுடைய பெற்றோர்களிடமிருந்து நீ வாங்கி கொடுத்தாக வேண்டும் என்றும் இல்லையென்றால் என் அண்ணனுக்கு போன் செய்து கூறினால் உன் வாழ்க்கையை நாசமாகிவிடும் என்று என்னை மிரட்டினார். மேலும், எனது கணவரிடம் இந்த நகைகள் குறித்து கேட்ட போது எனது அம்மா, எனது தங்கை அவர்கள் இப்படி தான் செய்வார்கள். மேலும், எனது கணவர் தினமும் மது அருந்திவிட்டு வந்து என்னை அசிங்கமாக திட்டி என்னிடம் தவறாக நடந்து கொள்வார். மேலும், 12.09.2021 அன்று என்னுடைய கணவரின் அண்ணன் தினேஷ் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது நானும், எனது கணவரும் தனி வீட்டில் இருந்தோம். அங்கு வந்த தினேஷ் எனக்கும்

சுதீஸ்க்கும் வாக்குவாதம் நடந்தது. அப்போது எனது தாலி செயினில் உள்ள டாலரை கழட்டி வைத்துவிட்டு எனது அப்பாவிடம் சென்று கூறப்போவதாக நான் சொன்ன போது சுதீஸ்ன் அண்ணன் என்னை வீட்டின் வெளியே வைத்து தாக்கினார். இது சம்பந்தமாக நான் அம்பத்தூர் W 28 காவல் நிலையத்திற்கு ஆன்லைன் மூலமாக புகார் கொடுத்தேன். அந்த புகாரை போலிசார் விசாரணை செய்த பிறகு எனது கணவர் வீட்டிற்கு வந்து எனது அண்ணன் மீது புகார் கொடுப்பாயா என்று கூறி என் வயிற்றில் எட்டி உதைத்தார். அதனால் எனக்கு இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அப்போது மருத்துவர்கள் Hemmorage Break ஆனதால் குழந்தை ரப்சர் ஆகிவிட்டது என்று கூறினார்கள். இது குறித்து எனது கணவரிடம் கூறிய போது அதற்கு அவர் இதுவரை குழந்தை வரும் என்று எனக்கு தெரியாது இப்போது குழந்தை வரும் என்று தெரிந்துவிட்டதால் இனி கவலை இல்லை பார்த்துக்கொள்ளலாம் என கூறினார். மேலும், என்னிடம் இனிமேல் நான் குடிக்கமாட்டேன், உன்னை அடிக்கமாட்டேன் என்று என்னிடம் சத்தியம் செய்தார். மேலும், நான் வேலை பார்த்து வைத்திருந்த பி.எப். பணத்தை அவர் என்னிடம் வாய் வார்த்தையாக கூறிவிட்டு சுமார் ரூ.54,000/– தொகையை அவர் எடுத்துக்கொண்டார். மேலும், அந்த பணத்தை எடுத்துக்கொண்டு எனக்கு ஒரு பைசா கூட அதில் செலவு செய்யவில்லை. மேலும், நான் தல தீபாவளிக்கு எனது பாட்டி வீட்டிற்கு சென்றிருந்தேன். எனது மாமியார் திரும்ப வரசொல்லிவிட்டார். மேலும், கடந்த 30.12.2021 அன்று நான் கற்பமானேன். ஆனால் அவர்கள் வீட்டிலிருந்து யாருமே என்னை பார்க்க வரவில்லை. அப்போது எனது மாமனார் மூன்று மாதம் கழித்து கரு உயிரோடு இருந்தால் பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்று பேசினார். மேலும், அவர்கள் வீட்டில் எனக்கு சரியான முறையில் உணவோ, உடையோ எதுவும் கொடுக்கவில்லை. மேலும், அவர்கள் வீட்டில் தங்கவிட்டதே இல்லை. மேலும், நான் கருவுற்ற சமயத்தில் மருத்துவமனைக்கு சென்று ஸ்கேன் செய்வதற்கு எதற்குமே எனது கணவர் வருவதில்லை. ஏனென்று கேட்டால் இந்த குழந்தையால் எனக்கு செக்சியூல் லைப் இல்லாமல் போகிறது என்று என்னை அசிங்கமாக திட்டுவார். மேலும், நான் கருவுற்று இருந்த சமயத்திலும், என்னை வற்புறுத்தி செக்ஸ் வைத்துக்கொள்வார். காலை எழுந்தவுடன் என்னிடம் தவறு செய்துவிட்டேன் என்று மன்னிப்பு கேட்பார். மேலும், ஐந்தாம் மாதம் வலைகாப்பிற்கு எனது பாட்டி வீடான வாணியம்பாடியில் வைத்திருந்தோம். அதற்கு அவர்கள் வருவதற்கு நாங்கள் டிக்கெட் புக் செய்து வைத்திருந்தோம். ஓட்டலில் ரூம் போட்டு வைத்திருந்தோம். அவர்கள் வந்துவிட்டு சென்றுவிட்டார்கள். ஆனால் ஒன்பதாம் மாதம் வலைகாப்பிற்கு அவர்கள் வரவில்லை, நாங்கள் செய்தோம். நான் சென்னை வந்து எனது மாமியார் வீட்டில் வலைகாப்பிற்கு வரவில்லை என்று கேட்ட போது அதற்கு அவர்கள் நாங்கள் கடனை அடைப்பதற்காக தான் உன்னை திருமணம் செய்தோம். உன் வலைகாப்பை நடத்துவதற்கு நாங்கள் கல்யாணம் செய்யவில்லை என்று எனது மாமியார் கூறினார். மேலும், கடந்த 21.08.2022 அன்று கே.எச்.எம். மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மூலம் எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. இந்த விஷயத்தை எனது கணவரின் வீட்டிற்கு நானே தெரிவித்தேன். ஆனால் அவர்கள் வீட்டிலிருந்து யாரும் பார்க்க வரவில்லை. அதன் பின்பு 24.08.2022 அன்று எனது குழந்தைக்கு ரொம்ப சீரியசாக உடல் நலம் பாதிக்கப்பட்டது. அதனை மருத்துவமனையில் ஒரு வாரம் வைத்திருந்தோம். அப்போதும் யாரும் வந்து பார்க்கவரவில்லை. அதன் பின்பு மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் ஆன பிறகு எனது மாமனாரிடம் ஏன் குழந்தை பார்க்க வரவில்லை என்று கேட்டபோது நீ ஆண்டி கேட்ட நகையை கொடுத்திருந்தால் நாங்கள் வந்து

பார்த்திருப்போம். நீ இதை பற்றி ஆண்டிகிட்டயே பேசி கொள் என்று போனை கட் செய்துவிட்டார். அதன் பின்பு எனது கணவரின் அண்ணனிடம் பிரிதீஸ் அவர்களிடம் போன் செய்து கூறினேன். அதற்கு அவர் என் தம்பிக்கே இந்த குழந்தை பிறக்கவில்லை. அதனால் நாங்கள் வந்து பார்க்கமாட்டோம் என்று கூறினார். அப்போது நான் என்னிடம் பணம் மட்டும் வாங்கினீர்கள் அதற்கு மட்டும் நான் தேவை, இப்போது என் குழந்தையை பார்க்க மாட்டீங்களா என்று நான் கேட்ட போது அதற்கு இந்த பணத்தை வீட்டிற்கு ஈபி பில் கட்டுவது, ரென்ட் கட்டுவதற்கும் தான் உன் பணம் தேவைப்பட்டது என்று கூறிய போது தான் எனக்கு தெரியவந்தது. மேலும், எனது கணவர் நான் பேசுலர் என்று கூறி 15 நாள் வெளியே சென்று தங்கிவிட்டார். அங்கு சென்று கேட்ட போது தான் அவர் பொய் கூறியவராக எனக்கு தெரியவந்தது. மேலும், அவர் என்னுடைய சித்தப்பா மகளுடன் அவர் இல்லீகல் தொடர்பு வைத்திருந்தார். இதை பற்றி அவரிடம் கேட்ட போது என்னை அசிங்கமாக திட்டி அவளை தான் எனக்கு பிடித்திருக்கு, நீ அழகா இல்லை என்ற என்னை மனம் புன்படும்படி திட்டினார். மேலும், என் குழந்தை மீது தலையணையை தூக்கி போட்டு உன்னால் தான் என்னுடைய செக்சியூல் லைப் வீணா போவதாக கூறி எனது குழந்தையை தலைகாணியால் அடித்தார். மேலும், குழந்தைக்கு பெயர் வைக்கும் பம்ஷனில் அவர் கலந்துகொள்ளவில்லை. அவர் லீவ் போட்விட்டு ஆபிஸ் இருப்பதாக கூறி வெளியே சென்றுவிட்டார். அவரிடம் போன் பன்னி கேட்டபோது அவர் மது அருந்தியிருந்தார். 29.01.2023 அன்று எனது கணவர் போன் செய்து அவரது தந்தை மருத்துவமனையில் சாககிடப்பதாக கூறி போன் செய்தார். குழந்தையை தூக்கிட்டு வந்து காட்வேண்டும் என்று கூறினார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்த போது அவர் 26.01.2023 அன்று டிஸ்ஜார்ஜ் ஆகி சென்றுவிட்டார். ஏன் இப்படி செய்தார் என்று கேட்டபோது நான் மாடியில் இருந்து பார்த்தேன். நீ அங்கும் இங்கும் அலைவதை பார்த்து நான் ரசித்தேன் என்று கூறினார். மேலும், என் மாமியார் இந்த சனியனை எங்களிடம் கொண்டாது காட்டாதே என்று கூறினார். மேலும், எனது கணவரிடம் நீ அடிக்கிற அடியில அவள் அவனை விட்டுவிட்டு ஓடிவிடவேண்டும். நான் நல்ல மலையாளியா பார்த்து உனக்கு கல்யாணம் செய்து வைப்பதாக எனது கணவரிடம் எனது மாமியா கூறினார்.

முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur